සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது /
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின்**
**III ஆம் தரத்திற்கான பண்ணை முகாமையாளர், விரிவாக்க அலுவலர்**
**மற்றும் தொழில்நுட்பவியல் அலுவலர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான**
**திறந்த போட்டிப் பரீட்சை - 2015 (2016)**

Open Competitive Examination for Recruitment to the Post of Farm Manager, Extension Officer and Technological Officer of Grade III Of Sri Lanka Technological Service for the Department of Export Agriculture - 2015 (2016)

**(02) பொதுப் பரீட்சை I (தொழில்நுட்ப மற்றும் விடய அறிவுசார் பொதுப் பரீட்சை)**

General Test I (Technological and Subject affiliated Test)

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

● **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.

1. விவசாயம், இலங்கைப் பொருளாதாரத்தில் முக்கிய இடத்தை வகிக்கும் அதேசமயம், நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கும் பிரதானமாகப் பங்களிப்புச் செய்கின்றது.

(i) (அ) 2014 ஆம் ஆண்டில், இலங்கையின் மொத்த தேசிய உற்பத்திக்கு, விவசாயத்துறையின் பங்களிப்பு எவ்வளவாகும்?

(ஆ) 2013 ஆம் ஆண்டுக்குச் சார்பாக, 2014 ஆம் ஆண்டில் இலங்கையின் விவசாயத்துறையின் வளர்ச்சி வீதம் எவ்வளவாகும்?

(இ) சிறு ஏற்றுமதிப் பயிர்கள் திணைக்களம் என அழைக்கப்பட்ட நிறுவனம், ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் என எவ்வாண்டில் பெயரிடப்பட்டது?

(ஈ) ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்திற்குச் சொந்தமான முதலாவது ஆராய்ச்சி நிலையம் இலங்கையின் எம்மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ளது?

(உ) பின்வரும் ஒவ்வொரு தொகுதியின் கீழும் இலங்கை பிரிக்கப்பட்டுள்ள வலயங்களின் எண்ணிக்கையைத் தனித்தனியாகக் குறிப்பிடுக.

I. விவசாயக் காலநிலை வலயங்கள்  II. விவசாய சூழலியல் வலயங்கள்

(ii) (அ) மண்ணில் இடப்பட்ட இரசாயன அல்லது சேதனப் பசளையில் அடங்கியுள்ள நைதரசன், தாவரங்களால் அகத்துறிஞ்சப்படும் பிரதான முறைகள் (வடிவங்கள்) எவை?

(ஆ) நைதரசனைப் பதிக்கும் பற்றீரியாக்களின் முக்கியத்துவம் யாது?

(இ) நீரில் அதிகமாக நைத்திரேற்று அயன்கள் இருப்பதனால் ஏற்படும் முக்கிய பிரச்சினை யாது?

(ஈ) தாவர ஒளித்தொகுப்புச் செயன்முறையை விளக்குக.

(iii) (அ) தாவரங்களின் அனுசேபச் செயற்பாட்டின்போது பொசுபரசின் பிரதான தொழிற்பாடுகள் யாவை?

(ஆ) தாவர வளர்ச்சியில் பொற்றாசியத்தின் பிரதான தொழிற்பாடுகள் யாவை?

(iv) (அ) "காலநிலை மாற்றம்" என்றால் என்ன?

(ஆ) காலநிலை மாற்றத்தினால், பயிர்ச்செய்கைக்கு ஏற்படும் முக்கிய பாதிப்புக்கள் யாவை?

2. (i) (அ) ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் எந்த அமைச்சைச் சேர்ந்ததாகும்?

(ஆ) ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தைச் சேர்ந்த முக்கிய பிரிவுகள் **நான்கைப்** பெயரிடுக.

(ii) பின்வரும் ஒவ்வொரு ஏற்றுமதி விவசாயப் பயிரினதும் விஞ்ஞானப் பெயரைத் தனித்தனியாகக் குறிப்பிடுக.

(அ) கறுவா  (ஆ) கராம்பு  (இ) ஏலம்  (ஈ) மிளகு
(உ) சாதிக்காய்  (ஊ) கமுகு (பாக்கு)  (எ) வெற்றிலை  (ஏ) கொக்கோ
(ஐ) வனிலா  (ஒ) இஞ்சி

(iii) பின்வரும் பயிர்களின் வளர்ச்சிக்கும் அறுவடைக்கும் பசளையிடுதலின் முக்கியத்துவத்தை விளக்குக.

(அ) கறுவா  (ஆ) மிளகு

(iv) பின்வரும் ஒவ்வொரு பயிரும் செய்கைபண்ணப்படும் பிரதேசங்களையும் அதற்குப் பொருத்தமான மண்ணின் தன்மைகளையும் தனித்தனியாகக் குறிபபிடுக.

(அ) கறுவா  (ஆ) கமுகு  (இ) மஞ்சள்  (ஈ) சாதிக்காய்  (உ) கொக்கோ

**3.** பூகோள ரீதியாக வெவ்வேறு தாவரங்களின் நிலவுகைக்கு வெவ்வேறு இனப்பெருக்க முறைகள் பங்களிப்புச் செய்கின்றன.

(i) பின்வருவனவற்றை வரையறுக்க.

(அ) உச்சியாட்சி (ஆ) ஒட்டுக்கிளை

(இ) ஒட்டுக்கட்டை (ஈ) இலிங்கமுறை இனப்பெருக்கம்

(உ) இலிங்கமில்முறை இனப்பெருக்கம்

(ii) தாவர இலிங்கமுறை இனப்பெருக்கத்தின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் விளக்குக.

(iii) கறுவாச் செய்கையில் காணப்பட்ட பீடைத் தாக்கமொன்றின் அறிகுறிகள் வருமாறு "நிறைவுடலி கறுவாத் தாவர தண்டின் அடிப்பாகத்தில் முட்டையிடும். அதிலிருந்து வெளியேறும் குடம்பிகள் தண்டின் இழையங்களை உணவாகக் கொண்டு மண்ணுக்கு அண்மித்த தண்டுவரை பயணிக்கும். இப்பாதிப்பு முதிர்ந்த கறுவாச் செய்கையில் அதிகமாகக் காணப்படும். இவ்வங்கிகளின் தாக்கத்தின் விளைவாக புதிதாக உருவாகும் அரும்புகள் இறந்து போதல், சில முதிர்ந்த தண்டுகள் அடிப்பகுதியில் முறிந்து விழுதல், புதிய அரும்புகள் உருவாதல் பலவீனமடைதல் ஆகியன நடைபெறும். இறுதியில் முழுமையாக செடி இறந்து போகும்."

(அ) மேற்படி பாதிப்பை ஏற்படுத்தும் பீடையின் பொதுப்பெயரைக் குறிப்பிடுக.

(ஆ) மேற்படி பீடையின் விஞ்ஞானப் பெயரைக் குறிப்பிடுக.

(இ) மேற்படி பீடைப் பாதிப்பைக் கட்டுப்படுத்தக்கூடிய முறைகள் எவை?

(iv) (அ) ஒன்றிணைந்த பீடைக் கட்டுப்பாட்டைச் சுருக்கமாக விவரிக்க.

(ஆ) பின்வரும் ஒவ்வொரு நோயிற்குமுரிய நோயாக்கியின் விஞ்ஞானப் பெயரைக் குறிப்பிடுக.

I. கறுவாவில் வெண்ணிற வேர் நோய்

II. வெற்றிலையில் பற்றீரியா இலை வெளிறல்

(இ) மேற்படி (iv) (ஆ) விலுள்ள ஒவ்வொரு நோயாக்கியையும் கட்டுப்படுத்தக்கூடிய முறையொன்றைத் தனித்தனியாகக் குறிப்பிடுக.

4. (i) உர மானியம் வழங்கல், இலங்கையின் விவசாயத் துறையில் செல்வாக்குச் செலுத்தியுள்ள விதத்தை விளக்குக.

(ii) (அ) இலங்கையில் சிற்றளவிலான விவசாயிகள் எதிர்நோக்கும் பிரதான சவால்கள் **ஐந்தைக்** குறிப்பிடுக.

(ஆ) பேண்தகு விவசாய அபிவிருத்திக்காக, மேற்படி (ii) (அ) இல் இனங் காணப்பட்ட ஒவ்வொரு சவாலையும் வெற்றி கொள்ளக்கூடிய முறைகளைத் தனித்தனியாக விளக்குக.

(iii) சேதன விவசாயத்தின் மூலம் இலங்கையின் விவசாயப் பொருளாதாரத்தை முன்னேற்றக்கூடிய விதத்தை விளக்குக.

(iv) இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள தேசிய விவசாயக் கொள்கை, எதிர்காலத்திற்குப் பொருத்தமானவாறு அமைக்கப்படவேண்டிய விதத்தை விளக்குக.

5. (i) இலங்கையின் **ஐந்து** பிரதான ஏற்றுமதிப் பயிர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

I. கறுவா II. மிளகு III. ஏலம்

IV. கராம்பு V. சாதிக்காய்

(அ) மேற்படி ஒவ்வொரு பயிரும் இலங்கையினால் பிரதானமாக ஏற்றுமதி செய்யப்படுகின்ற ஒவ்வொரு நாட்டைத் தனித்தனியாகக் குறிப்பிடுக.

(ஆ) மேற்படி ஒவ்வொரு பயிரிலும் பிரதானமாக அடங்கியுள்ள இரசாயனச் சேர்வை **அல்லது** பிரதான சார எண்ணெய்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

(ii) சேதன விவசாய முறைகளைப் பயன்படுத்தி ஏற்றமதிப் பயிர்களைச் செய்கை பண்ணுவதன் அனுகூலங்கள் யாவை?

(iii) (அ) மிளகை, காணியில் நடுகை செய்வதற்காக நடுகைப் பொருட்களைத் தேர்ந்தெடுக்கும் விதத்தைச் சுருக்கமாக விவரிக்க.

(ஆ) வெற்றிலைச் செய்கையை நிலத்தில் தாபிக்கும் விதத்தைச் சுருக்கமாக விவரிக்க.

(iv) (அ) "விவசாய விரிவாக்கற் சேவை" என்றால் என்ன?

(ஆ) இலங்கையின் ஏற்றுமதி விவசாயத் தொழிலின் வெற்றிக்காக, விவசாய விரிவாக்க சேவையை அதிக பயனுறுதி உள்ளவாறு பயன்படுத்தக்கூடிய விதத்தை விவரிக்குக.

* * *